**அரக்கோணம் நகராட்சி**
**சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு**

**கூட்ட எண்.41** **நாள் 08.03.2019.**

**பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 08.03.2019 வெள்ளிக்கிழமை கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.**

*****

**அரக்கோணம் நகராட்சி 08.03.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி/2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 ரத்தன் சந்த் நகர் மற்றும் வார்டு எண்.33 சோமசுந்தரம் நகரில் அமைக்கப்பட்டுள்ள நுன் உரக்கிடங்கு மையத்திற்கு (Micro Compost Center) மின்கம்பம் இல்லாததால் புதியதாக மின்கம்பங்கள் அமைத்து மின் இணைப்பு வழங்க மின்வாரியத்திற்கு கட்டணம் செலுத்த தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:1) மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.819/2018/இ1**

**பொருள் எண் :03**

அரக்கோணம் நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2016 ன் படி திடக்கழிவுகளை அகற்றும் பணிகளை 195 துப்புரவு பணியாளர்களை கொண்டு வெளிகொணர்வு (Out sourcing) முறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை கவனிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 27.02.2019 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூராய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி பெற்றதை தொடர்ந்து 04.03.2019 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | **பொது நிதி** | | **ஒப்பந்ததாரர் பெயர்** | **சத விகிதம்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **அதிக சத விகிதம்** |
| 1. | அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2016 ன் படி தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை வீடுகள் மற்றும் தெருக்களிலிருந்து சேகரித்து அதனை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து அதில் மக்கும் குப்பைகளை On site Composting மற்றும் Micro Compost Centre (MCC) தொட்டிகளில் சேர்க்கும் பணிக்கும், மக்காத குப்பைகளை நகராட்சி தெரிவிக்கும் இடத்தில் சேர்க்கும் பணிக்கும் மேலும் 36 வார்டுகளிலுள்ள தெருக்களின் பின்புறத்தில் அமைந்துள்ள சந்துகளில் உள்ள குப்பைகளை அகற்றுதல், தெருக்கள் மற்றும் முக்கிய போக்குவரத்து சாலைகளை பெருக்குதல், நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து கால்வாய்களை சுத்தம் செய்தல் மற்றும் தூர்வாருதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல். | **293.00** | - | – | **GREEN WARRIOR**<br><br>**CITY CLEAN** | **1.70%**<br><br>**3.16%** |

மேற்படி இரு விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவாக GREEN WARRIOR – 1.70% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

மேற்படி GREEN WARRIOR நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து வழங்குமாறு கடந்த 04.03.2019 அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் GREEN WARRIOR நிறுவனம் 04.03.2019 ம் தேதிய கடிதத்தில் கீழ்கண்ட விலை விகிதத்தில் பணிகளை செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

| ஒப்பந்ததாரர் | மதிப்பட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|
| GREEN WARRIOR | 1.70% | (–) 1.70% | 0.00% |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்ததாரரின் ஒத்திசைவு கடிதத்தின் படி GREEN WARRIOR நிறுவனம் 0.00% மதிப்பீட்டு விலைக்கே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்து கொடுத்துள்ளார். எனவே வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.2835/2018/எச்1)**

**பொருள் எண் :04**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து குடிநீர் தேக்க தொட்டிகளிலும் தானியங்கி இயந்திரம் கலம் குளோரினேஷன் செய்யப்பட்டு பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தானியங்கி இயந்திரம் பழுது ஏற்படும் நேரங்களில் மற்றும் சோடியம் ஹைபோ குளோரின் திரவம் நீர்த்து விடும் நிலையில் பிளிச்சிங் பவுடர் குடிநீரில் கலந்து பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் கருதி தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.**
**2) பொது மக்களின் குடிநீர் தேவை கருத்தில் கொண்டு அரக்கோணம் கூட்டுறவு சிறப்பங்காடியில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.347/2018/இ1**

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண்.29/15 தாசில்தார் தெருவில் திருமதி. D.சுகன்யா என்பவர் தரைத்தளம் மட்டும் கட்ட அனுமதி பெற்றும், அனுமதியில்லாமல் கூடுதலாக முதல்தளம், இரண்டாம்தளம், மூன்றாம்தளம் (ம) நான்காம் தளம் கட்டிடம் கட்டியுள்ளதற்கு திரு. கே.முனிரத்தினம் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P.17945/ 2017 தொடரப்பட்டு வாதிக்கு சாதகமாக தீர்ப்புரை வழங்கப்பட்டு, பிரதிவாதி (R4) திருமதி சுகன்யா என்பவரால் உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு (SLP(Civil)27222/2010)செய்யப்பட்டுள்ளது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களை 2–வது பிரதிவாதியாகவும், ஆணையர் அவர்களை 3வது பிரதிவாதியாகவும், நகர அமைப்பு அலுவலர் அவர்களை 4வது பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டுள்ளது. வழக்கினை சென்னை உயர்நீதிமன்றத்தில் நகராட்சி சார்பாக ஆஜராகிய திரு. S.S. சுவாமிநாதன் மூலம் உச்சநீதிமன்றத்தில் வழக்கறிஞர் M/S மதுஸ்மிட்டாபோரா என்பவரை ஏற்பாடு செய்து கொள்ளவும், உயர்நீதிமன்ற/ உச்சநீதிமன்ற தோராய செலவினம் ரு. 100000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– உயர்நீதிமன்ற/ உச்சநீதிமன்ற செலவினங்களுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 965 /2017/எப்1**

**பொருள் எண் :06**

அரக்கோணம் நகராட்சியின் 2019–2020 ஆம் நிதியாண்டிற்கு கீழ்கண்ட செலவினங்களுக்கு பொது அனுமதி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1) தினசரி நாளிதழ்கள் மூலம் ஒப்புந்தப்புள்ளி , ஏலம், வரிவசூல், அரசின் திட்டங்கள் மற்றும் இதர நகராட்சி தொடர்புடைய விளம்பரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் வெளியீடு செய்வதற்கான கட்டணங்கள்.
2) நகராட்சி சார்பில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளுக்கான அனுமதிக்கப்பபட்ட வழக்கறிஞர் கட்டணம் செலுத்த.
3) இந்நகராட்சி பணி நிமித்தம் ஆணையாளர், பொறியாளர் மற்றும் இதர நகராட்சிப் பணியாளர்கள் மேற்கொள்ளும் பயிற்சி, அலுவலக பணி நிமித்தம் தொடர்பான பயணங்களுக்கான பயணப்பட்டியல்களுக்கான தொகை வழங்க.
4) பணியாளர்களுக்கான பண்டிகை முன்பணங்கள், திருமணக்கடன், சிறப்பு சேமநல நிதி மற்றும் நகராட்சி பங்கு தொகை – இதர அத்தியாவசிய முன்பணங்கள் வழங்குதல்.
5) நகராட்சி வரிவசூல் மற்றும் பல்வேறு திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களிடம் தெரிவிக்க ஆட்டோ, மைக் விளம்பரக்கட்டணங்கள் மற்றும் செலவினங்கள்.
6) தமிழ்நாடு நகரியில் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தப்படும் பங்களிப்பு தொகைகள்.
7) நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மேற்கொள்ளும் பயிற்சிக்கான கட்டணங்கள் செலவினங்கள்.

**அலுவலக குறிப்பு:– 2019–2020 ஆம் ஆண்டிற்கான மேற்காணும் செலவினங்களுக்கு பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண். /2019/சி1**

**பொருள் எண் :07**

தணிக்கை அரக்கோணம் நகராட்சி 2017–2018 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் தொகை ரூ.108455/–ஐ செலுத்துமாறு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, வேலூர் அவர்களின் கடிதம் ப.வெ.ஏண்.11/அ2/72019 நாள்.12.03.2019ல் கோரப்பட்டுள்ளதால் இத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த நிதியிலிருந்து செலுத்த மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– உள்ளாட்சி நிதித் தணிக்கை கட்டணம் தொகை ரூ.108455/–ஐ பொது நிதியிலிலுருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.458/பி2/2013)**

**பொருள் எண் :08**

அரக்கோணம் நகராட்சி, வார்டு எண்.2, மாதவன் நகர் விரிவு பகுதியில், சர்வே வார்டு–எ, பிளாக்–1, நகரளவு எண்.4/3பி3 இடத்தில் 3.13 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் விற்கப்படாத மனைகள் 29 எண்ணிக்கைகளில் 03.09.2018 தேதியில் வரன்முறைப்படுத்தி ம.வ/ந.ஊ.து.இ(வேம) எண்.1253(R)/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் பேரில் மனுதாரர் 29 மனைகளுக்கான முறைப்படுத்துதல் கட்டணம் இரு தவணைகளாக 17.10.2018 தேதியில் ரு1,71,900/– மற்றும் 06.02.2019 தேதியில் ரு.62580/– உரிய தலைப்பில் அரசு கணக்கில் செலுத்தியுள்ளார். மேலும் அபிவிருத்தி கட்டணத்தை இரு தவணைகளாக 16.10.2018 தேதியில் ரு4,29,750/– மற்றும் 06.02.2019 தேதியில் ரு1,56,450/– நகராட்சி கருவூலத்தில்கில் செலுத்தியுள்ளார். மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பூங்கா இடங்களை தானப்பத்திரம் எண்.855/2019 நாள்.27.02.2019–ல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து 04.03.2019 அன்று நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்துள்ளார். இத்தானப்பத்திரத்தின்படி சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சி பராமரிப்புக்கு ஏற்றுள்ளதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண்.2085/18/எப்–1)**

**பொருள் எண் :08**

இந்நகராட்சிக்கு 2019–2020 ஆம் நிதி ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், படிவங்கள் மற்றும் கணிணி பயன்பட்டிற்கு தேவையான டோனர்கள் ஆகியவற்றை Napco கூட்டுறவு நிறுவனத்தில் வாங்கி கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- பொது நிதியிலிருந்து எழுது பொருட்கள் வாங்க ரூ.5 இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.804/பி2/2013)**

**பொருள் எண் :08**

மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வேலூர் அவர்களின் செயல்றை கடித எண்.அ8/857/2018 நாள். .02.2019ன்படி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2018–2019 ஆம் ஆண்டிற்கு கீழ் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோ.அரி அவர்கள் பரிந்துரை செய்த கீழ்குறிப்பிட்ட பணிக்கு நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது என்பதை நகரமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.<br>எ<br>ண் | பணியின் பெயர் | மதிப்பீடு<br>(ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அரக்கோணம் நகராட்சி, 9–வது வார்டு ஆதிதிராவிட அபிவிருத்தி சங்கம் அருகில் 12.5 மீ 6 செட் 300 வாட் உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல். | 7.25 |

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் பதிவு செய்யலாம்.**

**ந.க.எண்.1241/2018/இ1**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு 85 DBC பணியாளர்களை 01.01.2019 முதல் 31.03.2019ம் மாதம் வரை பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண் 461 நாள் 18.01.2019ல் ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது 01.03.2019 தேதிய டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பற்றிய மாவட்ட வாரந்திர ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்கள் தொடர்ந்து DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே 01.04.2019 முதல் 30.06.2019 வரை தொடர்ந்து 85 DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.19.00/– லட்சத்திற்கும் மற்றும் ஏற்கனவே பணி செய்து வரும் மூன்று மகளிர் சுயஉதவிக்குழுக்களின் மூலம் தொடர்ந்து பணி செய்து கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 061/எச்1/2017)

இந்நகராட்சியில் போதிய அளவில் வாகனங்கள் இல்லாத காரணத்தால் ஏற்கனவே வாலாஜா அக்ரோ நிறுவனத்தின் மூலம் ஒரு வாடகை டிராக்டர் நாள் ஒன்றுக்கு ரூ. 1650/- வீதம் 01.01.2019 தேதி முதல் 31.03.2019 வரை பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண் 467 நாள் 18.01.2019ல் ரூ.1.60 லட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது 01.04.2019 முதல் 30.06.2019 ஆம் மாதம் வரை ஒரு வாடகை டிராக்டர் பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 1.60 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்919/எச்1/2015)